SYS-4

B3-12707 -17

விருதுநகர் வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
முன்னிலை: திரு க.சுப்பிரமணியன், பி.எஸ்சி(வேளா)

ந.க. ஆ3/12707/17 நாள். 20 .03.2018.

பொருள் : பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப்பணி - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (தொகுதி-4)ல் அடங்கிய பணிகள் - நேரடித் தேர்வு மூலம் 2015-2016ஆம் ஆண்டிற்கான தட்டச்சர் பதவிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது - தட்டச்சராக பணியேற்றது - பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை :

1. சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.அநிபி.3/97065/2017 நாள் 20.10.2017.

2. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். ஆ3/12707/2017(1),நாள்.26.10.2017.

3. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். ஆ3/12707/2017(2),நாள்.26.10.2017.

4. திருமதி.எஸ்.சந்தியா, தட்டச்சர் பணியேற்பு கடிதம் நாள் 30.10.2017.

5. திருமதி. எம்.சரஸ்வதி, தட்டச்சர் பணியேற்பு கடிதம் நாள்.15.11.2017.

6. சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களின் கடித எண். அபபி.3/159754/2017-1 நாள். 30.01.2018.

------

**ஆணை:**

பார்வை (1)ல் குறிப்பிட்ட செயல்முறை ஆணையின்படி, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தினால் தொகுதி - IV ன் கீழ் 2015-2016ஆம் ஆண்டுக்கான நேரடி போட்டித்தேர்வின் மூலம் வேளாண்மைத்துறைக்கு கீழ்க்கண்ட தட்டச்சர்கள் தற்காலிகமாக தெரிவு செய்யப்பட்டு, விருதுநகர் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்து ஆணைகள் வழங்கப்பட்டது.

பார்வை (2) மற்றும் (3)ல் குறிப்பிட்ட செயல்முறை ஆணைகளின்படி, கீழ்க்கண்ட தட்டச்சர்களுக்கு, தட்டச்சராக விருதுநகர் மாவட்டத்தில் பணி நியமனம் செய்து ஆணைகள் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து பார்வை 4 முதல் 5 முடிய உள்ள பணியேற்பு கடிதத்தின்படி கீழ்க்கண்டவாறு தட்டச்சராக பணியேற்றுக் கொண்டனர்.

தட்டச்சர்களுக்கு பணிவரன்முறை செய்வது தொடர்பாக பார்வை 6-ல் குறிப்பிட்ட கடிதத்தில் வழங்கியுள்ள அறிவுரைகளின்படி, கீழ்க்கண்ட தட்டச்சர்களுக்கு தட்டச்சர் பதவியில் அன்னார் பணியேற்ற நாள் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

(த.பி.பா)

| வ. எண் | பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் | தட்டச்சராக பணியேற்ற நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|---|
| 1 | திருமதி.எஸ்.சந்தியா,<br>தட்டச்சர்,<br>வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், சிவகாசி | 30.10.2017 மு.ப | 30.10.2017 மு.ப |
| 2 | திருமதி.ம.சரஸ்வதி<br>தட்டச்சர்,<br>வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், சாத்தூர் | 15.11.2017 மு.ப | 15.11.2017 மு.ப |

மேற்கண்ட தட்டச்சர்கள் மூன்றாண்டு காலத் தொடர்பணியில் ஈராண்டுகள் தகுதிகாண் பருவத்தை முடிக்க வேண்டும் எனவும் ஆணைகள் வழங்கப்படுகிறது.

" The regularization is subject to the outcome of the W.Ps pending on the files of the Honourable Highcourt of Madras/Madurai Bench of the Honourable Highcourt of Madras relating to Group –IV services 2015-2016 recruitment.

ஒம்/- சு.சுப்பிரமணியன்,
வேளாண்மை இணை இயக்குநர்,
விருதுநகர்.

பெறுநர் :

1. திருமதி.எஸ்.சந்தியா,
   தட்டச்சர்,
   வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், சிவகாசி
   (உரிய வழிமுறையாக)
2. திருமதி.எம்.சரஸ்வதி
   தட்டச்சர்
   வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், சாத்தூர்
   (உரிய வழி முறையாக)

நகல் : வேளாண்மை உதவி இயக்குநர், சிவகாசி, சாத்தூர்

நகல் : பணிப்பதிவேடு

நகல் : இருப்புக்கோப்பு

நகல் : சென்னை, வேளாண்மை இயக்குநர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.
(அநிபி/அபபி பிரிவுகள்)

உபரி : 1

// ஆணைப்படி//

உண்மை நகல்

ஆட்சி அலுவலர்

ஆட்சி அலுவலர்
வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம்
சிவகங்கை.

11/8/23

11/08/2023

2/3/18